
முதல் உதயமாக

# "புதுப் புது மெட்டுக்கள்"




இயற்றியவர்:

இளம் மாணவன்

M. R. M. பௌஸான் (ரௌஸான்)

களுத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு துவங்குகிறேன். அவனது அளப்பரும் ஆசியும் அருளும் அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்கள் மீது நின்று நிலவுமாக.

அன்பிற்குரிய ரசிகர்களே! அறிவிலும் அனுபவத்திலும் சிறியவனாக இருக்கும் நான் "புதுபுது மெட்டுக்கள்" என்ற நூலை முதல் முறையில் தொகுத்தவன் என்று என்னுடை சிறு கருத்தை தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

இரண்டாயிரமாம் நூற்றான்றின் புது யுகத்திலே புதிய திறை பாடல்கள் இன்று ரசிகர்கள் மத்தியில் ஓர் எழுச்சியை ஏற்படுத் தியுள்ளது. இப்படிப்பட்ட புதுப்பாடல்களை இஸ்லாமிய கீதத்தில் மெட்டமைத்து தந்துள்ளேன். ஒவ்வொரு பாடல்களும் வேறு வேறு விதத்தில் அதற்கேற்ப உள்ளடக்கத்துடன் தொகுக்கப்பட்டுள்ளது. எனது இந்த சிறு முயற்சி ரசிகர்கள் மத்தியில் வெற்றியாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இன் நூலில் என் மரதியின் காரனமாகத் தவறுகள் கானப்படின் திருத்திக் கொடுத்தால் நன்றியுடன் எடுத்துக்கொள்வேன்.

எங்கள் ரப்பே! உனது பேரருளாள் இந்நூலை தொகுத்தேன் இதனை பரிபூரணமாக ஏற்றுக்கொள்வாயாக. இதை எழுதி வெளியிடுவதில் குற்றம் குறை இருப்பின் உனது கருனையால் மன்னிப்பாயாக! இந்த நூலை நல்ல முறையில் பரிசோதித்து, பிழைகளை திருத்துவதற்காக மிகவும் உதவியாக இருந்த ஓய்வு பெற்ற அதிபர் எம். வை. எம். இஸ்மாஈல் அவர்களுக்கும். இந்நுலை வெளியிட உதவிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

இந்த புது புது மெட்டுக்களை வாங்கி படித்து உனர்ந்து, மீண்டும் ஒரு நூலை வெளியிட உங்களது பாராட்டுக்களை எதிர்ப்பார்க்கிறேன். கருணையுள்ள ரஹ்மான் இந்த என் முயற்சியில் நான் இழைத்து விட்டிருக்க கூடிய குற்றங்களை மன்னித்தருள்வாயாக ஆமீன்.

வஸ்ஸலாம்,
"இளம் மாணவன்"
**எம். ஆர். எம். பஸ்லான் (ரொஸான்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- அந்த வானுக்கு ரெண்டு தீபங்கள்

நம் வாழ்வுக்கு ரெண்டு தீபங்கள்
அது நபியும் மறையும் தான் .......//

அந்த புனித தீபம் ரெண்டும் இல்லையென்றால்
நம் வாழ்வில் வெற்றயில்லையே
அந்த புனித தீபம் ரெண்டும் இல்லையென்றால்
இந்த மண்ணில் உயர்வு இல்லையே
எம் நபி போல் உலகில் எவரும் வரவில்லையே
நபி தானே ஏ....... வாழ்வுக்கு ஆதாரம்
மறை தானே ஏ....... அறிவுக்கு ஆதாரம்

(நம் வாழ்வுக்கு)

கோடி மனிதர்கள் ஒன்றாக கூடி நபியின் புகழையே பாட
மனித வாழ்விலே இன்னல் போக்கிய தூதர் புகழையே சொல்க
நபி தீன் வழியை நமக்கு ஈந்து சென்றார்
தேன் மறை என்பதொன்றை நமக்கு தந்தார்
மா மறை போல் உலகில் எங்கும் செல்வமில்லை

(நபி தானே ஏ....)

அந்த நாளிலே மனித வாழ்விலே பாவ செயல்களே எங்கும்
பெண் குழந்தைகளை அரபு நாட்டிலே உயிருடன் புதைத்தாரே
அதை மாற்ற நபி சொன்ன நல்வாழ்க்கை தான்
அதற்காக நபி செய்த பணி கோடி தான்
நம் கருனை நபி போல் உலகில் செல்வமில்லை

(நபி தானே ஏ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- மேகமாய் வந்து போகிறேன்

நபியை நான் புகழ்ந்து வாழ்த்துகிறேன்
யா அல்லாஹ்! உன்னை போற்றினேன்
நபி புகழ் கூற இயலாது
என்று நாம் நபியை கான்பது
எம் நபியே......ஏ..... எம் நபியே......ஏ......

(நபியை நான்)

வாழ் நாளிலே மரணம் உண்டு
அது தானே உண்மையே
அடடா வழி தவரானதே
அதில் தானே துன்பமே
மார்க்கம் அழகானது அது இலேசானது
மார்க்கம் சுகமானது அது சுமையற்றது
எம் நபியே........ எம் நபியே...........

(நபியை நான்)

நபி வந்ததும் தீன் வந்தது
என்றென்றும் ஆனந்தம்
நபி பேசினால் அவர் வார்த்தையில்
எங்கெங்கும் பூவாசம்
எம் புமான் நபி மிக உயர்வானவர்
அவர் வழி சென்றாலே நாமும் சுவனம் செல்வோம்
எம் நபியே......... எம் நபியே..........

(நபியை நான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- ஒரு பொய்யாவது சொல் கன்னே

ஒரு மரணம் வருவது உன்மை இதை புரிந்தால் வாழ்வில் நன்மை
அந்த சொல்லில் உயிர்வாழ்வோம்
தீமை செய்தால் நரகம் அந்த நரகத்திலுள்ள கொடுமை.......
இதை தாங்குமா எம் நெஞ்சம்.......//
வானுக்கும் பூமிக்கும் இறைவன் ஒன்று தான்
இறுதி நபியும் ஒன்று தான்
வாழும் காலம் கொஞ்நம் தான்
காலமும் நேரமும் நாளும் வீணில் தான்
அதிலும் தீமைகள் கோடி தான்
வாழும் வாழ்க்கை கொஞ்சம் தான் (ஒரு மரணம்)
குன் என்றசொல்லால்.........ஆ..........
உலகத்தை நீ தான் படைத்தாயே்.......//
இறுதி நபியை அன்று தந்தவன் நீ தானே........ஏ.....
வானம் பூமி யாவும் படைத்து காத்து எம்மை
வழியை காட்டி நீ தான் உலகில் வாழச்செய்தாயே
நல்லோர் ஞெஞ்சில் என்றும் இரக்கமுள்ளவளே உந்தன் அருளைக்
கொண்டு எம்மை மண்ணித்திடுவாயே
ஆனால் இறைவா நாம் செய்யும் தீமைகள் கோடி
இன்று அல்லாஹ் உன்னை அறிந்து கொண்டோம் நாமும்
(ஒரு மரணம்)
மறுமையில் எமக்கு சுவனம் திறப்பதும் நீதானே.....
நரகை மூடி உந்தன் அருளை பொழிபவனே
இறுதி நாளில் முழு உலகை அழித்து
எம்மை கருணை காட்டி சுவனம் நுழையச் செய்வதும் நீதானே
நல்லோர் நெஞ்நில் என்றும் இரக்கமுள்ளவனே
எமக்கும் அந்த நாளில் அருளை பொழிபவன் நீதானே
ஆனால் இறைவா நாம் செய்யும் தீமைகள் கோடி
இன்று அல்லாஹ் உன்னை அறிந்து கொண்டோம் நாமும்
(ஒரு மரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- நெனெச்சபடி நெனெச்சபடி

ஒளிவீசும் ஒளிவீசும் மார்க்கம் வந்ததம்மா

பெண் மானம் காப்பதற்கே
பெண் உலகில் வாழ்வதற்கே.........//

பெண்மானத்தை காத்துக்கொண்டு
ஈமானையும் மனதில் கொண்டு
இறைவனையே தினமும் போற்று பெண்னே
திருமறையை கையில் ஏந்தி
அதன்படியே தினமும் வாழ்ந்து
இறைவனை அஞ்சிக்கொள்ளு பெண்ணே
ஐ வேளை தொழுகை தொழுது, நம் இறைவனை அஞ்சி நடந்து
நபி தூதரை நீயும் புகழ்ந்து வாழ்ந்து காட்டு

நபி மகளார் வாழ்ந்த வாழ்வினிலே
நீ சென்றிட வேண்டும் அவ்வழியே..........//

அன்னை பாத்திமா போல் நீயும் வாழ்க
(ஒளிவீசும்)

காலையில் எழுந்ததும் குளித்துக்கொள்ளம்மா
வீட்டின் குலவிளக்காய் நீயும் இருந்து காட்டம்மா.........//
நாணமுள்ள பெண்ணாய் நீயும் வாழ்ந்து காட்டம்மா
வாழ்த்துக்கூற நாளும் உண்டு மறுமை நாளம்மா

உன்கனவனை நன்றாய் பார்த்துவிடு
இனி மறுமையை எண்ணி வாழ்ந்திடு........//

இனி பாத்திமாவைப் போல் நீ வாழ
என்றும் வாழ்த்து கூறும்
தீனோடு நீ வாழ்க! தீனோடு நீ வாழ்க!
(ஒளிவீசும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு தோறும் ரமழானை பிடித்துக்கொள்ளம்மா
ஏழையோடு இரக்கம் கொண்டு உதவி செய்யம்மா........//

முக்காடு கொண்டு முகத்தை மூடிக் கொள்ளம்மா
வாழ்க்கையிலே வறுமை வந்தால் பொறுத்துக்காட்டம்மா

இனி தீமைகள் என்பது கிடையாது
இனி நன்மைகள் அன்றி வேறேது..........

இனி பாத்திமாவைப் போல் நீ வாழ
என்றும் வாழ்த்து கூறும்
தீனோடு நீ வாழ்க! தீனோடு நீ வாழ்க!

(ஒளிவீசும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- இன்னிசை பாடிவரும்

நபி புகழ் பாடிவரும் அவர் புகழ் என்றும் ஓய்வதில்லை
நபி வழி இல்லையென்றாள் நம் பாதையில் வெற்றியில்லை
ஐ வேளை தொழுவதில் உள்ளம் தூய்மையாகுதே
ஆனால் தொழுகை என்பதை மக்கள் அறிவதில்லையே
நபி வாழ்விலே என்றும் வெற்றியே
அந்த புனித வாழ்வை நாமும் போற்றி வாழ் வோமே

(நபிபுகழ்)

தீனில்லை என்றாலோ நாம் வாழ முடியாது
தீன் தந்த நபியை இன்று நாம் கான முடியாது
நபி வழி போதுமே நாம் சீராய் வாழவே
தொழுகை போதுமே நாம் சுவனம் செல்லவே
இறைவன் அருளை பெறுவ தென்றால் நல்வழி சென்றிடுவோம்
திருமறை கூறும் பாதையிலே நாமும் வாழ்ந்திடுவோம்
அந்த புனித வாழ்வை நாமும் போற்றி வாழ்வோமே

(நபிபுகழ்)

மனம் போன போக்கினிலே நாம் செல்லக் கூடாது
அல்லாஹ்வை நினைக்காமல் நாம் வாழ முடியாது
தீமைகள் போதுமே அழி நரகம் தேவையா
அழியும் உலகினிலே மன ஆசைகள் தேவையா
இறைவன் அருளை பெறுவதென்றால் நல்வழி சென்றிடுவோம்
குர்ஆன் கூறும் பாதையிலே நாமும் வாழ்ந்திடுவோம்
அந்த புனித வாழ்வை நாமும் போற்றி வாழ்வோமே

(நபிபுகழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- பூவுக்குள் நுழைந்திருக்கும்

மக்கத்தில் வந்துதித்த நபித்தூதர் அதிசயம்
அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்துமே அதிசயம்
துனியாவின் வாழ்வு அதை நினைத்தாலே அதிசயம்
திருமறை கூறும் வழி செல்லாதது அதிசயம்
அதிசயமே வியர்ந்து போகும் இறைவேதம் அதிசயம்

ஆதமும் ஹவ்வாவும் பெற்றோர்கள் இல்லாமல்
பிறந்திட்ட பிறப்பு அதிசயம்
பேறுகால பருவங்கள் சென்றிட்ட பின்னலே
பிறந்திட்ட குழந்தை அதிசயம்

(மக்கத்தில்)

அந்தப் பாலைவன மண்ணினிலே நபி இஸ்மாஈல்
கால் பதிந்த இறை நீரும் அதிசயமே
செங்கடல் கொண்ட நைல் நதியில்
சிறு வழி மூலம் மூஸாவை போகச் செய்ததும் அதிசயமே
இறை யோனின் அருளாலே அழியாத பிர்அவ்னின்
மேனி கொண்ட றுதியும் அதிசயமே
கணவனற்ற மர்யமின் கைகளில் தவழ்ந்த ஈஸா பேசிய
மொழியை நினைத்தால், நினைத்தால் அதிசயமே

(ஆதமும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- பூசு மஞ்சள் பூசு மஞ்சள்

துயர் சுமந்த துயர் சுமந்த நபியே போற்றடுவோம்
தீனுக்காக தியாகம் செய்த தூதரை நினைத்திடுவோம்
வாழ்நாளில் கஷ்டங்களே
அந்த நாளென்றும் துன்பங்கலே
தொல்லைகள் எப்போதுமே
அந்த காபீர்கள் கொடுத்தார்களே............
சொல்லுமே என் மனமும் சொல்லுமே .........ஒ.........
பொங்குதே கண்ணீரும் பொங்குதே
ஆ.........ஆ...........ஆ.........ஆ...... (துயர் சுமந்த)

மக்காவில் உதித்து வந்தீர்
தீன் சேவை செய்து வந்தீர்
உமை போற்ற நாவுகளோ போதாதே.........
தியாகமே நபி வாழ்வில் தியாகமே
நபியே நீர் போர் செய்தீர்
மக்காவை வெற்றி கொண்டீர்
காபீர்களை யெல்லாமே மண்ணித்தீரே
கருணையையே நபி மனதில் கருணையே
விதவைக்கு வாழ்வளித்தீர் அதை நாமம் மறப்பதுண்டோ
இறைவனை நம்பி வந்தீரே இதுவாகும் ஈமானே
அது நபி வழியே இன்று மெய் வழியாக
உலகில் வந்து இன்று உதித்தது இஸ்லாம் மார்க்கமே
இதுவாகும் மார்க்கமே ஒ.......
உன்மையே இதுதானே உன்மையே

(துயர் சுமந்த)

நபியே நீர் வேதம் தந்தீர்
மிஃராஜ் எனும் பயனம் செய்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ வேளை தொழுகையையும் தந்து சென்றீரே
வெற்றியெ நம்வாழ்வில் வெற்றியே
உலகெங்கும் இஸ்லாத்தை நன்றாக பரவசெய்தீர்
அழகான திட்டமெல்லாம் சொல்லி தந்தீரே
தியாகமே இதுவாகும் தியாகமே
நபியே நீர் சுவனம் சென்றீர்
உமை நாமும் மறப்புதுண்டோ
நபியே உம் வாழ்க்கை இது
இதுவாகும் தியாகமே
அது நபிவழியே இன்று மெய் வழியாக
உலகில் வந்து இன்று உதித்தது
இஸ்லாம் மார்க்கமே
இதுவாகும் மார்க்கமே ஓ...........
உன்மையே இதுதானே உன்மையே

(துயர் சுமந்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- இது காதல் ஆரம்பம்

இது வாழ்க்கை ஆரம்பம்
இது வாழ்க்கை ஆரம்பம்
போகாதே மனம் போன போக்கில் போகாதே.........//
மனம் போன போக்கில் போகாதே
நீ உலகில் இன்பம் தேடாதே
நாம் வாழும் வாழ்க்கையோ இது கொஞசம் காலம்
(இது வாழ்க்கை)

இம்மையின் வாழ்வு குறுகிய வாழ்க்கை
மறுமையின் வாழ்வோ நிரந்தர வாழ்க்கை
காலங்கள் தோறும் பாவங்கள் கூடும்
ஆசைகள் கோடி குடிகொள்ளும் மனதில்
நாம் மறுமைக்காக தேடிடுவோம்
நாம் செல்லும் இடத்தை உனர்ந்திடுவோம்
நம் துணைகளுக்கங்கே யாருமில்லை
பெற்ற தாயும் கூட வருவதில்லை
தீமைகள் வேண்டாம் நன்மைகள் செய்வோம்
என்றும் வாழ்நாளில்
(இது வாழ்க்கை)

இறைவனின் கருனை கிடைத்திட வேண்டும்
ஏந்தல் நபியை அங்கு நாம் கான வேண்டும்
சுவர்க்கம் நமக்கு கிடைத்திட வேண்டும்
அர்ஷெனும் நிழலில் அமர்ந்திட வேண்டும்
இனி மறுமையை என்னி வாழ்ந்திடுவோம்
இந்த இம்மையில் அதனை பயரிடுவோம்
மன ஆசைகள் இன்றி வாழ்ந்திடுவோம்
வரும் மௌத்தை மனதில் எண்ணிடுவோம்
தீமைகள் வேண்டாம் நன்மைகள்
செய்வோம் என்றும் வாழ்நாளில்
(இது வாழ்க்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- வாழ்க்கையில் ஆயிரம் தடைகளப்பா

வாழ்க்கையில் நமக்கொரு தூதரப்பா
கிடைத்தது நமக்கொரு அதிஷ்டமப்பா...........//

நன்மைகள் செய்துவிடு தீமைகள் முற்றும் ஒழித்து விடு
நபிவழி வாழ்வில் ஏற்றுவிடு மகிழ்பவன் யா அல்லாஹ்!

நபி அவர் சொல்லும் வழி பட்டு
வாழ்வில் நன்மை தனை பெற்று
இறுதியில் சுவனத்தை வெற்றி பெற செய்பவன்
யா அல்லாஹ்!
அவன் பிறக்கப்பட்டவில்லை யாரையும் பிறக்கச் செய்யவில்லை
அவனுக்கு யாதொரு துணையில்லை அவன் தான்
யா அல்லாஹ்!
நபி மனி வாழ்வினை ஏற்று நடப்பவன் மனிதனடா
நபி அவர் வாழ்வினை மறந்து வாழ்பவன் மடையனடா
யாருக்கும் தீங்கின்றி வாழ்ந்தவர் நபியே
உலகிற்கே வாழ்ந்துயர்ந்தவர் நபியே
இறுதி வறைக்கும் தூதரப்பா
அன்று முதல் அவர் புனிதரப்பா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- வெள்ளி மலரே வெள்ளி மலரே

ஏந்தல் நபியே தீனின் ஒளியே.........//

அன்று முதல் நபி துயரம் உற்றார்
தோழர்களோடு தியாகம் செய்தார்
மார்க்கம் செழிக்க கல்லடி பட்டார்
போர் முனையிலே போரும் தொடுத்தார்
இத்தனை தவங்கள் ஏன் தான் செய்தாரோ
ஒளி வீசும் இஸ்லாம் மார்க்கம் உலகில் நிலைக்கவோ
தீன் ஒளியே! எம் நபியே! நபி இன்னல்கல் யாவும் பொறுத்தாரே
தியாகத்திலே அவர் வாழ்வை கழித்தாரே .......ஓ........

(ஏந்தல் நபியே)

ஏ...... அனாதையாய் பல காலம் வாழ்ந்தார்
ஆடுகள் மேய்க்கும் தொழிலை செய்தார்
மடமையில் வாழ்ந்தோரை மாற்றினார்
ஏ..... தாயிப் நகரில் நபி கண்ட கொடுமை
காபிர்கள் நபியை விரட்டியும் கூட
கொஞ்சமும் சினங்க வில்லை
வாழ்வைப் பாராய் பாராய்
நபி உற்ற துயரம் யாருக்கு தெரியும்
கல்லடி பட்ட சருதார் நபியே
அவர் புனித மேனியிலே இரத்தமே இரத்தமே

(ஏந்தல் நபியே)

ஏ..... குணத்தில் நபி போல் யாருமில்லை
நபி சொன்ன வார்த்தைகள் பொய்யே இல்லை
உண்மை உரைத்தார் எம் நபியே



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

ஓ...... நபித் தோழருடன் மதினா சென்றார்
அங்கே அவர்கள் சேவை செய்தார்
கொஞ்சமும் தயங்கவில்லை சருதார் நபியே வாழ்வின் ஒளியே
அறுபத்து மூன்றில் இறையடி சேர்ந்தார்
உலகம் அவரை போற்றிட வேண்டும்
அவர் புனித வாழ்வினிலே வாசம் வீசும்

(ஏந்தல் நபியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- உறுப்பு சிறுத்தவளே

பெண்ணில் சிறந்தவளே, நபி நாயகத்தின் மகளாரே
நீர் அன்று வாழ்ந்த வாழ்வு இன்று பெண்களுக்கு
ஒளியம்மா! என்றும் உம்மைப் போல் யாருமில்லை
பெண்களில் உலகம் போற்றும்
ஒரு புறத்தில் துன்பங்கள், மறு புறத்தில் துயரங்கள்
அத்தனையும் பொறுத்துக்காட்டி இறைவனை பயந்து வாழ்ந்தீரே
உன்மை பெண்ணாக வாழ்ந்வளே
சுவனம் செல் வோரில் முதல்வியே
இனி பிறர் கண்களில் தென்படாமலே
இவள் வாழ்ந்து காட்டி தூய இறைவனை போற்றிடுவாள்

(பெண்ணில்)

ஐவேளை தொழுகை தொழுதபடி
ரமழானில் நோன்பை பேணிடுவாள்
ஏழைக்கிவள் வாரி கொடுத்தபடி
ஏழை நெஞ்சில் என்றும் குடியிருப்பாள்
நாயகத்தின் மகளல்லவா! கதிஜாவின் புதல்வியல்லவா
இருவருக்கும் ஒளியாய் வந்த, முத்தாய் உதித்த தங்முமல்லவா!
வறுமை வாட்டுகின்ற வேளையிலே
பொறுமை கடலாக இவள் இருப்பாள்
இனி பிறர்கண்களில் தென்படாமலே
இவள் வாழ்ந்துகாட்டி தூய இறைவனை போற்றிடுவாள்

(பெண்ணில்)

முக்காடு போட்டு முகத்தினிலே
கணவனை பணிந்து வாழ்ந்திடுவாள்
நாணமுள்ள பெண்ணாய் வாழ்ந்தபடி
வீட்டின் குலவிளக்காய் இவள் இருப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலியாரின் மனைவியல்லவா!
ஹஸன், ஹுஸைனின் தாயுமல்லவா!
இவர்களை கண்ணுக்குள் வைத்தே என்றும் பார்த்து வாழ்ந்திடுவாள்
வறுமை வாட்டுகின்ற வேளையிலே
பொறுமை கடலாக இவள் இருப்பாள்
இனி பிறர்கண்களில் தென்படாமலே இவள்
வாழ்ந்து காட்டி தூய இறைவனை போற்றிடுவாள்

(பெண்ணில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- சிறகே இல்லாத பூங்குருவி

முடிவே இல்லாத வாழ்க்கையொன்று அந்த மறுமையில் இருக்கிறது
அளவே இல்லாத இன்பங்களை அந்த சுவனம் தருகிறது
வாழ்ந்திடும் மண்ணிலே தீமையை போக்குவோம்
நன்மைகள் செய்திடுவோம்
உலகின் ஆசைகள் மனதில் வந்ததும் நபியை நினைத்திடுவோம்

(முடிவே)

நபியை புகழாத மனங்களிலே தீமை குடிகொள்ளுமே
நபியின் வழி நடந்தால் சுவர்க்கமே அதுவே நிரந்தரமே
நபி சொன்னார் அந்நாளில் அதுவே நல்வாழ்வு
நாம் வாழ வழி அதுவே ............//
நாளும் நன்மைகள் செய்தால் வெற்றியே
வான்மறை சொல்கிறதே மறுமை
வாழ்வை போல் வாழ்க்கை இல்லையே அங்கே நிரந்தரமே

(முடிவே)

பாதை வழி மாறி போகுதே படைத்தவன் நினைவில்லையே
பாவம் நாள் தோறும் செய்வதால் நரகம் இருக்கிறதே

இதை மனதால் நாம் உணர்ந்து
இறைவன் அருள் கிடைக்க நல் வழியில் சென்றிடுவோம்.......//

மறுமையின் விதைநிலம் இம்மையாகுமே
இங்கே பயிரிடுவோம்
மறுமை வாழ்வை போல் வாழ்க்கை இல்லையே
அங்கே நிரந்தரமே

(முடிவே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- பார்த்து பார்த்து கண்கள் பூத்திருப்பேன்

நாளும் நாளும் நன்மைகள் செய்வோமே நாம் எப்போதும்
கோடி நன்மை தேடி கொல்வோமே நாம் எப்போதும்............//

ஐந்து நேரத் தொழுகையில் தானே வெற்றியுள்ளதே
நோன்பு நோற்று ஏழை வரியும் கொடுக்க வேண்டுமே
வசதியுள்ள மனிதன் ஹஜ்ஜை முடிக்க வேண்டுமே
நன்மை தேடி சென்றால் தானே சுவனம் உள்ளதே
நன்மை செய்வோமே! நன்மைகள் செய்வோமே

(நாளும்)

மக்கள் யாவரும் ஒன்றே குலமெனும் மார்க்கம் வந்ததே
மாந்தர் திலகம் நபியை போல யாரும் இல்லையே
நபியே நீர் செய்த சேவை எதையும் மறக்க முடியாததே
நபியே நீர் பட்ட துயரங்கள் என்றும் சொல்லால் அடங்காததே
நபி சொன்னாரே, நாம் செய்வோமே
நல் வாழ்க்கை அது தானே
நன்மை செய்வோமே! நன்மைகள் செய்வோமே!

(நாளும்)

உலகத்தின் வாழ்க்கை என்றோ ஒரு நாள் நிச்சயம் முடிந்துவிடும்
அழிவே இல்லா மறுமையின் வாழ்க்கை நிச்சய மானதே
நபியே நீர் சொன்ன வழியில் நடந்தால் அங்கே வெற்றி உண்டு
நபியே நீர் சொன்னவழியில் நடந்தால் அங்கே சுவனம் உண்டு
நபி சொன்னாரே நாம் செய்வோமே
நல் வாழ்க்கை அதுவாகும்
நன்மை செய்வோமே! நன்மைகள் செய்வோம்

(நாளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- காதல் வெண்ணிலா கையில் சேருமா

மறுமை நாளிலே சுவனம் கிடைக்குமா
சொல்லு யா அல்லாஹ்!
நீ சொல்லு யா அல்லாஹ்!
நபி சொன்ன வழியில் நடப்போம்
ஒரு தீமையின்றி வாழ்வோம்
உன்னை போற்றி நாம் இருப்போம்
தினம் நன்றி உரைத்திடுவோம்

(மறுமை)

நன்மையை செய்ய நீ பனித்தாய்
அதனை உரைக்க அன்று நபியை தந்தாய்
உலகத்தை படைத்த வல்லவனே
உனக்கு நிகராக யாருமில்லை
மறையின் வழியில் நடந்திடுவோம்
அஞ்சி தினமும் வாழ்ந்திடுவோம்
நிசொல்லு யா அல்லாஹ்!...........

(மறுமை)

மரணம் என்பதும் உன்வசமே
அர்ஷின் தலைவனும் நீதானே
காற்றும் மழையும் கதிரவனும்
ஆற்றும் செயல்கள்களெல்லாம் உன் வசமே
மனதில் கொண்டு வாழ்த்திடுவோம்
சுவன பாதையில் நாம் நடப்போம்
நிசொல்லு யா அல்லாஹ்!...........

(மறுமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு:- மழைதுளி மழைதுளி மண்ணில் சங்கமம்

ஓ.... வாழ்வில் வாழ்வில் வரும் மரணமே
உன்னை தேடி வரும் நிதமுமே
நேரம் இல்லாமல் வரும் மரணமே! மரணமே!.............//

அட மனிதா நீயும் உனர்ந்து வாழ்ந்திடு உலகிலே
அந்த மௌத்தொன்று நிச்சயமானது வாழ்விலே
மனிதர்களெல் லோர்க்கும் அது தங்கும் இடமாகும்
நீ செல்லும் இடமெங்கே அது கப்ருஸ்தானமாகும்
நீ மடைமையில் தவிக்கின்றாய்
இதை புரியாமல் வாழ்கின்றாய்
இனி திருந்திட பார் மனிதா
நீ சென்றிட வேண்டும் அங்கே

(வாழ்வில் வாழ்வில்)

தாயின் கருவறை உன் கொஞ்ச கால வாடியடா
உலகை பார்த்தவுடன் உனக்கு ஆசைகள் கோடியடா
நீ உறவோடு உரிமையும் கொண்டாட அவசியமில்லையடா
மரணம்! மரணம்! ஒரு நாள் வருவது உனக்கும் தெரியாது.....ஓ
மனமே! மனமே! நன்மை வெல்லும் தீமை வெய்யாதிரு
விழியே! விழியே! மௌத்தை அஞ்சி நீயும் வாழ்வாய் இங்கே

வாழ்வில் வாழ்வில் வரும் மரணமே
உன்னை தேடி வரும் நிதமுமே
நேரம் இல்லாமல் வரும் மரணமே! மரணமே!.............//

உனக்காக தான் கப்று அட இருட்டறையிலே நீயும்
என்ன நடக்குமோ நாளும் மனிதா சொல்
நீ செய்யும் நன்மையே காக்கும்
நீ செய்யும் தீமையே அழிக்கும்
இது இறைவன் சொன்ன சொல்லு மனமே சொல்!
மனமே சொல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை தேடும் மனிதன் என்றும் இதனை மறப்பான்
தான் செல்லும் இடத்தை மறந்து இன்பம் பெறுவான்
மௌத்து வந்தால் ஏது? அட சந்தாக்கில் உனை வைத்து
தூக்கி செல்லும் போது உனை பார்ப்பது அங்கே யாரு?
மனமே! மனமே! மௌத்துக்கு நேரம் ஏது? அட ஏது?
மௌத்துக்கு நேரம் கிடையாது! கிடையாது! கிடையாது!

(அட மனிதா நீயும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHICAL DATA

TITLE OF THE BOOK :
"PHDU PUDU MATTUKKAI"

AUTHOR:
M. R. M. FOWZAN (Rozan)

FIRST EDITION:
2000/ /

ADDRESS:
108/2, Jayasundara Mawatha,
Kalutara South.

New Address:
44 N, New Mosque Road,
Maha Heenatiyangala,
KALUTARA SOUTH.

PRINTED BY:
The Allied Print
258/5A, Dam Street, Colombo - 12.
Tel: 074-716238

PRICE : 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org